## ‘திரைப்படத்துறையில் தனக்கென அடையாளத்தை உருவாக்கிக் கொண்டவர்!’

# இயக்குநர் பாரதிராஜாவின் மகன் -நடிகர் - இயக்குநர் மனோஜ் பாரதி மறைவு!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 27–

நடிகரும் இயக்குநர் பாரதி ராஜா அவர்களின் மகனுமான மனோஜ்பாரதி நேற்று முன்தினம் மறை வெய்தினார்.

அன்னாரது மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்க ளில் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், “திரைப்படங்களில் தனக் கென அடையாளத்தை உருவாக் கிக் கொண்டவர்’ மனோஜ் பாரதி, என்றும், “இயக்கம் உள்ளிட்ட துறைகளிலும் முயன்று பார்த்த வர்!” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் இரங் கல் செய்தி வருமாறு:-



**நடிகரும் இயக்குநர் பாரதி ராஜா அவர்களின் மகனுமான மனோஜ் பாரதி அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிக- வும் வருத்தமுற்றேன்.**

**தனது தந்தையின் இயக் கத்தில் ‘தாஜ்மகால்’ திரைப்ப டம் மூலம் அறிமுகமாகி, சமுத் திரம், அல்லி அர்ஜுனா, வருஷ மெல்லாம் வசந்தம் எனத் தொடர்ந்து பல திரைப்படங்களில் நடித்து தனக்கென அடையா ளத்தை உருவாக்கிக் கொண்ட வர் மனோஜ் அவர்கள். இயக் கம் உள்ளிட்ட துறைகளிலும் முயன்று பார்த்தவர் மனோஜ்.**

**இளம் வயதில் அவர் எதிர் பாராதவிதமாக மறைந்துவிட்டது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.**

**அன்பு மகனை இழந்து வாடும் இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், திரைத் துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## விதிமுறைகளை மீறினால் தொழிற்சாலை மீது நடவடிக்கை நிச்சயம்!

# பவானி ஆற்றங்கரையில் சாய ஆலைக்கு அனுமதி!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**சென்னை, மார்ச் 27-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது அ.தி.மு.க. உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டை யன், “பவானி ஆற்றங்கரையில் சாய ஆலைக்கு அனுமதி” குறித்து எழுப்பிய வினாவுக்கு, நிதி மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென் னரசு விரிவாக விளக்கமளித் தார்.**



சட்டப்பேரவையில் - கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கே.ஏ.செங்கோட்டையன்:** பவானி சாகர் ஆற்றங்கரை ஓரத்தில் புதிதாக ஒரு சாயத் தொழிற்சாலை ஒன்று உரு வாக்குவதற்கு அரசிடமி ருந்து அந்த ஆலைப் பணிக ளைத் துவக்குவதற்கு NOC வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆற்றங்கரை ஓரத்தில் 40, 50 மின்னேற்று நிலை யங்கள் இருக்கின்றன. ஏறத் தாழ 40 இலட்சம் பேர் அந் தக் குடிநீரைப் பயன்படுத்தி வருகின்றார்கள். ஆகவே, மக்களுக்கு இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலையில் அரசு உட னடியாக இந்த சாயப்பட்ட றைக்கு கொடுக்கப்பட்டி ருக்கிற முன் அனுமதியை இரத்து செய்யுமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** உறுப்பினர் செங்கோட்டை யன் அவர்கள் சொல்லக்கூ டிய இந்த தொழிற்சாலை யானது காவேரி ஆற்றினு டைய உப நதியாக இருக் கக்கூடிய பவானி ஆற்றிலி ருந்து 500 மீட்டர் தொலை வில் அமைந்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கக்கூடிய பல் வேறு நடைமுறைகள் பல் வேறு விவசாயச் சங்கங்கள் அதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து புதிதாக நம்மு டைய ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையினுடைய அடிப் படையில் கடந்த 26.11. 2024-ல் அதற்கான அரசினு டைய அனுமதி வழங்கப் பட்டு, மாசுக் கட்டுப் பாட்டு வாரியம் அதற்கு விரிவாக்கத்திற்கான செல் லத்தக்க ஆணைகளையும் 31.3.2028 வரை செல்லத் தக்க ஆணையாக வழங்கியி ருக்கிறார்கள்.

இதிலே நம்முடைய உறுப்பினர் செங்கோட்டை யன் அவர்கள் குறிப்பிட்ட தைப்போல, அங்கே இருக் கக்கூடிய விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுகி றது என்று அங்கு இருக்கக் கூடிய விவசாயப் பெருங் குடி மக்கள் அவர்களும், அவர்களுடைய குரலை எதி ரொலிக்ககூடிய வகையில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்த இசைவு ஆணையை இரத்து செய்ய வேண்டு மென்று வலியுறுத்தி வந்தி ருக்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலை இயங்குவதற்குத் தேவைப்ப டக்கூடிய நாளொன்றுக்கு 15.68 இலட்சம் லிட்டரில் 15.23 இலட்சம் லிட்டரை சுத்திகரிக்கப்பட்ட சாயக்க ழிவு நீரிலிருந்து எடுத்துக் கொள்ளவும், மீதமுள்ள நாளொன்றுக்கு 45 ஆயிரம் லிட்டர் நீரினை மட்டும் தான் பவானி ஆற்றிலிருந்து எடுத்துக்கொள்ள விரி வாக்க இசைவு ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். கழிவு நீரை நீர்நிலைகளில் வெளி யேற்றுவோ அல்லது விவ சாய நிலங்களிலே விவசா யத்திற்கு உபயோகப்படுத் தவோ நிச்சயமாக அதற்கு அனுமதி கிடையாது.

மேலும், கழிவுநீரைச் சுத் திகரிக்கும் அமைப்புகளில் கண்காணிப்பு cameraக்கள் மற்றும் 30 இடங்களில் மின் காந்த அளவுமானிகள் EMFM பொருத்தி வாரிய இணையதளத்தில் இணைக்க அறிவுரை வழங் கியிருக்கிறோம். இந்தத் தொழிற்சாலை மற்றும் சுற் றியுள்ள இடங்களில் நிலத் தடி நீர் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மாதிரி களைச் சேகரித்து வாரியம் மூலம் அதைக் கண்காணிக்க வேண்டுமென்றும் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

இப்போதைக்கு அவர் கள் சொல்லியிருப்பதைப் போல the consent to establish அதைத் துவக்குவதற்கான ஆணைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தற்போதுவரை அது விரி வாக்கப் பணிகளை மேற் கொள்ளவில்லை. ஆனால், இப்போது அதைச் செய்யக் கூடாது என்று அங்கிருக்கக் கூடிய அனைத்துத் தரப்பின ரும் கோரிக்கைகளைத் தந்தி ருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை அரசு உரிய முறையிலே ஏற்றுக் கொண்டு, அந்த தொழிற்சா லையை தொடர்ந்து கண்கா ணிக்கப்பட்டு, இந்த விதி முறைகளை எல்லாம் அவர் கள் மீறக்கூடியபட்சத்தில் நிச்சயமாக அந்தத் தொழிற் சாலைகளில் நாங்கள் நடவ டிக்கை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## தாய்மொழியைப் பாதுகாப்பதற்கும், வளர்ச்சிக்கும்

# கலைஞர் செய்ததுபோல் இந்தியாவிலேயே யாராவது உண்டா?

### சட்டப்பேரவையில் – முதல்வருக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி புகழாரம்!

**சென்னை, மார்ச் 27–**

**சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பதி- லளித்து பேசுகையில் மும்மொ- ழித் திட்டத்தை எப்போதும் ஏற்க முடியாது என்று கூறிய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்- சர் அன்பில் மகேஸ் பொய்யா- மொழி பேசுகையில் தாய்- மொழியை பாதுகாப்பதற்கும், வளர்ச்சிக்கும் கலைஞர் செய்த- தைப் போல் இந்தியாவில் யாரா- வது செய்தது உண்டா? என்று கேட்டார்.**



இது குறித்து சட்டப்பேர வையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசி யதாவது:

**அன்பில் மகேஸ் பொய்யா மொழி:** பேசியிருக்கின்ற மாமன்ற உறுப்பினர் எல்லோருமே மிக முக்கியமான ஒரு கருத்தை வலியுறுத்தி, சட்டமன்ற உறுப் பினர் எழிலன் அவர்கள் ஆரம் பித்ததிலிருந்து Official Languages Act, 1963-ன் 1967 amendment-லிருந்து, 1976-ல் Official Language Rules ஆக மாறி யதிலிருந்து, இங்கே உறுப்பி னர் சின்னப்பா அவர்கள் பேசி யது மிகவும் முக்கியமான கருத்து. English-ஐ பொறுத்தவ ரையில் அது ஒரு ஆட்சிமொழி யாக 15 years-க்கு மட்டும்தான் சொன்னார்கள். அது அப்படி யேதான் இருக்கிறது. இன்னும் அதை close செய்யவேயில்லை. நாம் தற்காத்துக் கொள்ள வேண்டுமென்றால், கண்டிப் பாக தமிழ்நாட்டு முதல மைச் சர் அவர்கள் அறிவிக்கப் போகின்ற அறிவிப்பு உள்ளப டியே நமக்கு மிகப் பெரிய பாதுகாப்பாக இருக்கும் என் கின்ற நம்பிக்கை எனக்கு இருக் கின்றது. குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந் திருக்கின்ற எங்களைப் பொறுத்தவரைக்கும் தமிழ்த் தாய் வாழ்த்துக்கென்று சட்டத் தைக் கொண்டு வந்தவர் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு பேருந்திலும் திருக் குறளும், திருவள்ளுவரின் புகைப்படமும் இடம்பெற வேண்டும் என்று சொன்னவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இதுமட்டுமல்ல, வள்ளுவர் கோட்டத்தை எழுப்பியது எங் கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ் வளர்ச்சித் துறைக்கு என்று தனித் துறை யைக் கொண்டுவந்தவர் எங்க ளுடைய கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கென்று தனியாக அலுவ லகத்தைத் தந்தது தலைவர் கலைஞர் அவர்கள். G.O. அர சாணை தமிழிலே வர வேண்டு மென்று சொன்னவர் நம்மு டைய கலைஞர் அவர்கள். 133 அடியில் வள்ளுவருக்கு சிலை அமைத்து தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆம் வகுப்பு வரையில் கட்டாயம் தமிழ்ப் பாடம் இருக்க வேண்டுமென்று சொன்னவர் நம்முடைய கலை ஞர் அவர்கள். பத்தாம் வகுப் பில் மாவட்ட அளவில் அதிகப் படியான மதிப்பெண் யார் எடுக்கிறார்களோ அவர்க ளுக்கு மடிக்கணினியை வழங்க வேண்டுமென்று, இதுவரை யில் 2,205 மாணவச் செல்வங் களுக்கு மடிக்கணினியை வழங்கியது நம்முடைய தலை வர் கலைஞர் அவர்கள்.

#### தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து!

செம்மொழி என்கின்ற அந் தஸ்தை நம்முடைய தமிழ் மொழிக்கு பெற்றுத் தந்தவர் நம்முடைய கலைஞர் அவர் கள். (மேசையைத் தட்டும் ஒலி) கோயம்புத்தூரில் மிகப் பெரிய மாநாட்டை நடத்திக் காட்டியவர் நம்முடைய முத் தமிழறிஞர் கலைஞர் அவர் கள். மொழிப்போர் தியாகி களுடைய பிள்ளைகளுக்கு quota-விலே கல்லூரியிலே இடம் தர வேண்டுமென்று சொன்ன வர் நம்முடைய தலைவர் கலை ஞர் அவர்கள். அதேபோன்று தமிழ் அறிஞர்களுக்கான ஒய்வூ தியமாக ரூ.3,000 வழங்கியவர் கலைஞர் அவர்கள். அவர்கள் இறந்துவிட்டால் அவர்களு டைய கணவனுக்கோ, மனை விக்கோ ரூ.1,500 வழங்கியது கலைஞர் அவர்கள்.

#### எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள்!

பேரவைத் தலைவர் அவர் களே, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். கிட்டத்தட்ட 122 பெரிய மொழிகள் இருக் கின்றன. 1,599 மற்ற மொழி கள் எல்லாம் நம்முடைய இந் தியாவிலே இருக்கின்றன. எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் இருக்கின்றன என்று நாம் சொல்கிறோம் அல் லவா, ஒட்டுமொத்த இந்தியா விலேயே தன்னுடைய தாய் மொழியை பாதுகாப்பதற்கும், வளர்ச்சிக்கும் எங்களுடைய கலைஞர் போல் செய்தது யாராவது உண்டா என்று தேடிப் பாருங்கள் கலைஞரினு டைய உயரம் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார், தலைமைச் செய லாளர் வந்து ஒரு கடிதம் எழு தினார். அந்த கடிதம் தெளி வாக இல்லை. அது ஒரு விவாதப் பொருளாக இருக்கி றது என்று அதை நீங்கள் accept செய்கிறீர்களா, இல்லையா என்று கேட்கிறார். எங்களைப் பொறுத்தவரையில் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முதலமைச்சர் அவர் கள் வழியில் நடைபோடுகின் றவர்கள் நாங்கள். எங்களு டைய தலைமைச் செயலாளர் ரொம்ப specific ஆக அதில் சொல்லி இருக்கிறார். “Based on the recommendation of the Committee on the State Level we will constitute a Committee headed by the Principal Secretary of School Education Department. Based on the Committee’s recommendation, we will decide” committee ஒத்துக்கவில்லை, எங் களுக்கு பணம் வேண்டாம். அதனால்தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் நீங்கள் கொடுக்கிற ரூ.2,000 கோடியை நான் வாங்கினேன் என்று சொன்னால் எங்களுடைய தமிழ் சமுதாயத்தை 2,000 ஆண்டுகளுக்கு பின்னோக்கி செல்கின்ற அந்த பாவத்திற்கு நான் ஆளாவேன். ரூ.10,000 கோடி கொடுத்தாலும் எனக்கு தேவை இல்லை என்று சொன் னார் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். அத னால், எல்லோரும் தெளிவாக இருக்கின்றோம். ஆனால், இங்கே ஒரு மாநில கட்சியைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கே சம கல்வி, சம கல்வி என்று கையெ ழுத்து வாங்கிக் கொண்டிருக்கி றார்கள்.

#### சமச்சீர் கல்வி!

சமச்சீரைக் கொண்டு வந்து அனைவருக்கும் சமமாக அந்த சமச்சீர் கல்வியைக் கொண்டு போனதே நம்முடைய முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களு டைய மண் இந்த மண். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கு சம கல்வி, சம கல்வி என்று சொல்லிக் கொண்டு எங்களுடைய பிள் ளைகள் மேல் கொண்ட அக் கறை என்று சொல்லிக்கொ ள்வது எப்படி இருக்கிறது தெரி யுமா? கலைஞர் அவர்கள் சொல்வது போன்றுதான். “பாலுக்கும் காவல், பூனைக் கும் தோழன்” என்கின்ற அள விற்கு இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கின் றார்கள், அந்த தேசிய கட்சி யைச் சார்ந்திருக்கின்றவர்கள்.

ஆக இதை நான் வன்மை யாக கண்டிக்கின்ற அதேநேரத் தில், நம்முடைய தமிழ்நாட்டி னுடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகின்ற அறிவிப்பு என்பது உள்ளப டியே ஒரு மிகப்பெரிய அறி விப்பாக இருக்குமென்கின்ற எதிர்பார்ப்பு எனக்கு மட்டு மல்ல ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டைச் சார்ந்திருக்கிற அனைத்து மக்களுக்கும் இருக் கிறது என்பதைத் தெரிவித்து இந்தளவில் நிறைவு செய்கி றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் அன் பில் மகேஸ் பொய்யா மொழி பேசினார்.

---



தஞ்சை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பசுபதி கோவில் அண்ணா சிலை அருகில், ஒன்றிய அர சின் சர்வாதிகார போக்கைக் கண்டித்து நடைபெற்ற பிரம்மாண்ட கண்டன பொதுக்கூட்டத்தில் கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, கழக இளம் பேச்சாளர் பாவை பூர்ணிமா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இதில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, மாவட்ட துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், தியாக.சுரேஷ், கோ.க.அண்ணாதுரை, பி.எஸ்.குமார், என்.நாசர், பேரூர் செயலாளர்கள் டி.பி.டி.துளசியய்யா, எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணி யம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, கும்பகோணம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

25–03–2025 நிகழ்வுகள்



### தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

1. ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட( MGNREGA) நிதியை வழங்காதது குறித்து நேரமில்லா நேரத்தில் விவாதிப்பதற்காக, திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனி மொழி கருணாநிதி எம்.பி. நேற்று (25.03.2025) மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானத்தை கொண்டு வந்து கேள்வி நேரத்தில் தன் கேள்விகளை முன்வைத்தார்.

அவரை தொடர்ந்து அத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத் தது குறித்து மக்களவையில் நேர மில்லா நேரத்தில் வேலூர் திமுக எம். பி. கதிர் ஆனந்த் அவர்களும் பொள் ளாச்சி கே. ஈஸ்வரசாமி அவர்களும் பேசினார்கள்.

#### 2. ’நீலப் பொருளாதாரம்’ - ஆபத்தும் - தீர்வும்!

**திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கேள்வி**




கடல்சார் சுற்றுச் சூழல் வளங்களின் நலனை பாதுகாக்கும் மற்றும் மீனவர்களின் பொருளாதார வளர்ச்சி, வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு கடல் வளங்களை நிலை யான முறையில் பயன்படுத்துவதைக் குறிக்கும் “நீலப் பொருளாதாரம்” குறித்து திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. மக்களவையில் இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மீனவர்கள் மற்றும் பிற கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கு கால நிலை மாற்றத்தால் தொடர்ந்து ஆபத்து ஏற்பட்டு வருகிறது. இதனால் நீலப் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய உட னடி அச்சுறுத்தலை எதிர்கொள்ள அர சாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்

மற்றும் இது தொடர்பாக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வழங்கியுள்ள உதவிகள் குறித் தும் ஒன்றிய மீன்வளத்துறை அமைச் சரிடம் டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் பதில் கோரியுள்ளார்.

#### 3. ஆதி திராவிடர், பழங்குடியின மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கான உதவித் தொகை

**திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. கோரிக்கை**



தமிழ்நாட்டில், SC/ ST/OBC மாணவர்க ளுக்கு வழங்கப்படும் உதவித்தொகைத் திட் டங்களின் விவரங்கள் கேட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. மக்களவையில் கேள்வி கேட்டுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ் நாட்டில் இந்த உதவித்தொகைகளால் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்களை கேட் டுள்ள ஆ. ராசா அவர்கள், தகுதியான மாணவர்களுக்கு இந்த உதவித்தொ கைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத் தவும், உதவித்தொகையை பெறுவதற் கான வழிகளை எளிமையாக்கவும் கோரிக்கை வைத்துள்ளார்.

#### 4. பிரதமர் ஏழைகள் நலத்திட்டம்! விளக்கம் கேட்கும் எம்.எம்.அப்துல்லா!




பிரதமர் ஏழைகள் நலத்திட்டம் (PMG KAY) தொடங்கப்பட்ட திலிருந்து தமிழ்நாட் டில் மாவட்ட வாரியாக உணவு தானியங்க ளைப் பெற்ற மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை குறித்து திமுக எம்.பி. எம். எம். அப்துல்லா மாநி லங்களவையில் கேள்வி எழுப்பியுள் ளார்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், வீடற்ற நபர்கள் மற்றும் தினசரி கூலி பெறுபவர்கள் போன்ற பொருளாதார ரீதியாக அடித்தட்டும் மக்களுக்கு கூடு தல் உதவிகள் வழங்கப்பட்டுள்ளதா?

அப்படியானால் அவர்களை இத்திட் டம் சென்றடைய பின்பற்றப்பட்ட விநி யோக வழிமுறையின் விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டில், குறிப்பாக தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதி களில் இத்திட்டத்தை கொண்டு செல்ல மற்றும் அதன் செயல்திறனை மேம்ப டுத்த ஒன்றிய அரசு எடுத்து வரும் நட வடிக்கைகள் என்ன எனவும் அவர் அதில் கேட்டுள்ளார்.

#### 5. சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்

**டாக்டர் கனிமொழி சோமு கோரிக்கை!**



தமிழ்நாட்டில் சுகா தார உள்கட்ட மைப்பை மேம்படுத்து வதற்காக தமிழ்நாடு அரசு முன்மொழிந் துள்ள தீர்மானம் குறித் தும், இந்தியாவில் அண்மைகாலமாக அதிகரித்து வரும் மனநலன் பிரச்சினைகளை கருத்தில் கொண்டும் திமுக மாநிலங்களவை உறுப்பினரும் மருத்துவருமான கனி மொழி சோமு எம்.பி. நாடாளுமன்றத் தில் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு அமைச்சகத்திடம் இரு வேறு கேள்விகளை எழுப்பி யுள்ளார்.

தமிழ்நாடு அரசு முன்மொழிந்துள்ள சுகாதார தீர்மானத்தை முன்வைத்து ஒன்றிய அரசு இதுவரை திட்டங்கள் வகுத்திருந்தால் அதன் விவரங்களை யும் அதற்கான நிதி உதவியையும் வெளியிட வேண்டும் என கேட்டுள்ள அவர், நாட்டில் மிகக் குறைந்த அளவி லேயே மனநலப் பராமரிப்பு நிபுணர் கள் உள்ளனர் என்பதை சுட்டிக்காட்டி ஒன்றிய அரசு அதை பற்றி அறிந்திருக் கிறதா எனவும், நாட்டில் மனநலப் பிரச் சினைகளை முறையாக நிவர்த்தி செய் வதற்கும், மனநலப்பிரச்சினைகளுடன் தொடர்புடைய சமூக களங்கத்தைக் குறைப்பதற்கும் சுகாதாரப் பணியாளர் களுக்கு பயிற்சி அளிப்பது போன்ற நட வடிக்கைகளை எடுக்க அரசாங்கம் திட் டமிட்டுள்ளதா அப்படியிருந்தால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் அடிப்படையில் மனநலத்திற்கான தற்போதைய செலவுகள் குறித்த விவ ரங்கள் என்ன என்றும் கேட்டுள்ளார்.

#### 6. கோவிட்க்கு பிறகு இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

**நடவடிக்கை கோரிய ஆர். கிரிராஜன்**




கடந்த சில ஆண்டு களாக இளம் வயது இறப்பு அதிகரித்திருப் பது குறித்து கவலை தெரிவித்துள்ள திமுக எம்.பி. ஆர். கிரிராஜன் அதுபற்றி நாடாளு மன்ற மாநிலங்களவையில் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பி யுள்ளார்.

கோவிட் தொற்றுநோய்க்கு பிறகு நாட்டு மக்களிடையே நுரையீரல், கல் லீரல் மற்றும் மண்ணீரல் கோளாறுக ளால் ஏற்படும் இறப்பு திடீரென அதிகரித் துள்ளதை அரசாங்கம் தீவிரமாகக் கவனிக்கின்றதா? அப்படியானால், அதன் விவரங்களை வெளியிடுக என் றும் கோவிட் தொற்றுநோய்களின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட மருந் துகளினால் ஏற்பட்ட பக்க விளைவுகள் குறித்து அரசாங்கம் நடத்தியிருக்கும் ஆய்வுகளை வெளியிடவும் அவர் கேட் டுள்ளார்.

#### 7. கிராமப்புற சாலைகளை மேம்படுத்துவதில் தாமதம்!

**உடனடி நடவடிக்கை கோரிய கள்ளக்குறிச்சி டி.மலையரசன்**



தமிழ்நாட்டில் பிரத மர் கிராமப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (PMGSY) சாலை கள் கட்டுவதில் தாமதம் ஏற்படுவதற்கான கார ணங்கள் குறித்து கள் ளக்குறிச்சி திமுக எம்.பி. டி.மலை யரசன் மக்களவையில் கேள்வி எழுப் பியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் பிற சிக்கல்களில் ஏதேனும் சவால்கள் எதிர்கொள்ளப்பட் டுள்ளதா, அப்படியானால், அத்தகைய சிக்கல்களைத் தீர்க்க எடுக்கப்பட்ட நட வடிக்கை விவரங்கள் மற்றும் தமிழ் நாட்டில் திட்டத்தை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், மற்றும் அவற்றிற்கான காலக்கெடு ஆகியவை குறித்தும் விவரங்கள் வெளியிட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.